பக்கங்கள் 21

# மாலை முரசு

முழக்கம்: 01 வள்ளுவ ஆண்டு 2054 மார்கழி 23 திங்கட்கிழமை 08.01.2024 அதிர்வு 161

## வவுனியாவில் ரணிலை எதிர்த்த ஜெனிற்றாவுக்கு மறியல் 12 ஆம் திகதி வரை நீடிப்பு

(கி.வசந்தரூபன்)

வவுனியாவில் ஜனாதிபதியின் வருகைக்கு எதிராகப் போராட்டத்தில் ஈடுபட்ட காணாமல் ஆக்கப்பட்டோர்

04▸



### மின் கட்டண அதிகரிப்புக்கு எதிராக மனுத் தாக்கல்

# மக்களை வதைக்கும் அரசுக்கு விரைவில் முடிவு கட்டுவோம்!

### உயர் நீதிமன்ற வளாகத்தில் சஜித் சூளுரை

"தான்தோன்றித்தனமான மின்சாரக் கட்டண அதிகரிப்பின் மூலம் மக்களின் அடிப்படை உரிமைகள் மீறப்பட்டுள்ளன. எனவே, தற்போதுள்ள மின் கட்டணத்தைக் குறைக்குமாறு உத்தரவிட வேண்டும்." - என்று கோரி எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ உயர் நீதிமன்றில் அடிப்படை உரிமை மீறல் மனுவை இன்று தாக்கல் செய்துள்ளார்.

சட்டத்தரணி ஷியாமலி அத்துகோரல ஊடாக எதிர்க்கட்சித் தலைவர் இந்த மனுவைத் தாக்கல் செய்துள்ளார்.

04▸



## வடக்கில் இருந்து கிழக்கு நோக்கிய பேரணி வழக்கு: 3 எம்.பிக்கள் உட்பட எழுவரை விடுவித்தது நீதிமன்றம்




(எஸ்.நிதர்ஷன்)

வடக்கில் இருந்து கிழக்கு நோக்கிப் பயணித்த பேரணியில் கலந்துகொண்ட குற்றச்சாட்டு தொடர்பான வழக்கில் இருந்து 3 நாடாளுமன்ற உறுப்பினர்கள் உட்பட ஏழு பேரை யாழ்ப்பாணம் நீதவான் நீதிமன்றம் விடுவித்தது.

இலங்கையின் 75 ஆவது சுதந்திர தினத்தைக் கறுப்பு நாளாகப் பிரகடனப்படுத்தி யாழ். பல்கலைக் கழக முன்றலில் இருந்து கிழக்கு நோக்கி முன்னெடுக்கப்பட்ட பேரணியில் பங்கேற்ற நாடாளுமன்ற உறுப்பினர்களான சிவஞானம் சிறிதரன், சார்ள்ஸ் நிர்மலநாதன், செல்வம் அடைக்கலநாதன் மற்றும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்களான

04▸



### 1,500 பரத நாட்டிய கலைஞர்களின் பங்கேற்புடன்

# கிழக்கில் 1008 பானைகள் வைத்து இன்று மாபெரும் பொங்கல் விழா





1008 பொங்கல் பானைகள் வைக்கப்பட்டு,1,500 பரத நாட்டிய கலைஞர்களின் பங்கேற்புடன், 500 கோலங்களுடன் பொங்கலை வரவேற்கும் முகமாக மாபெரும் பொங்கல் திருவிழா இன்று திருகோணமலையில் நடைபெற்றது.

கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமான் ஏற்பாட்டில் இந்தப் பொங்கல் திருவிழா இடம்பெற்றது.

இலங்கை வரலாற்றில் இம்முறையே இவ்வாறு பிரமாண்டமாக பொங்கல் விழா நடத்தப்பட்டுள்ளது.

பொங்கல் விழாவை முன்னிட்டு நேற்றுமுன்தினம் ஜல்லிக்கட்டு போட்டியை கிழக்கு ஆளுநர் நடத்தி இருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.





### தமிழரசுக் கட்சியின் தலைமை வேட்பாளர்

# சிறிதரன் எம்.பி. கிழக்கில் இருநாள் சுற்றுப் பயணம்



(வி.ரி.சகாதேவராஜா)

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் தலைவர் வேட்பாளரும் யாழ்ப்பாணம் – கிளிநொச்சி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான சிவஞானம் சிறிதரன் கடந்த இரு தினங்களாகக் கிழக்கு மாகாணத்துக்குச் சூறாவளிச் சுற்றுப் பயணத்தை மேற்கொண்டிருந்தார். அதன்போது திருகோணமலை, மட்டக்களப்பு, அம்பாறை மாவட்டங்களுக்கு விஜயம் செய்திருந்தார்.

அம்பாறை மாவட்டத்தில் முதல் கூட்டம் கல்முனை பிராந்திய தமிழரசுக் கட்சி பொதுச் சபை உறுப்பினர்களுக்கான கூட்டமாக பாண்டிருப்பு அண்ணா மண்டபத்தில் நேற்று நடைபெற்றது .

அங்கு நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறிதரன் பிரதான உரையாற்றினார்.

நாடாளுமன்ற உறுப்பினர் தவராசா கலையரசன் முதலில் உரையாற்றினார்.

பின்னர் முன்னாள் மட்டக்களப்பு நாடாளுமன்ற உறுப்பினர்கள் பா.அரியநேத்திரன், ஞா.ஸ்ரீநேசன், சீ.யோகேஸ்வரன் மற்றும் முன்னாள் மாகாண சபை உறுப்பினர் மா. நடராஜா உள்ளிட்ட பலர் கலந்துகொண்டு உரையாற்றினார்கள்.

அங்கே இலங்கைத் தமிழரசுக் கட்சியின் தலைமை வேட்பாளர் நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறிதரன், தான் தலைவர் தெரிவுக்குப் போட்டியிடுவதன் நோக்கம், அதற்கான பின்புலங்கள், கட்சியின் செயற்பாடு தொடர்பாக உரையாடினார்.

இதன்போது தமிழரசுக் கட்சியின் பொதுச் சபை உறுப்பினர்களும் தங்களது சந்தேகங்களைக் கேட்டு தீர்த்துக் கொண்டார்கள். கல்முனை வடக்கு பிரதேச செயலக விவகாரம் பிரதானமாகக் கலந்துரையாடப்பட்டது.

அதனை அடுத்த கூட்டம் அக்கரைப்பற்றிலே முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் கவீந்திரன் கோடீஸ்வரன் தலைமையில் அவரது இல்லத்தில் நடைபெற்றது. அங்கு ஊடகச் சந்திப்பும் இடம்பெற்றது.



# முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்

**ஜெனிற்றாவுக்கு...**

உறவுகளின் சங்கத்தின் தலைவியான சி.ஜெனிற்றாவை எதிர்வரும் 12 ஆம் திகதி வரை தொடர்ந்து விளக்கமறியலில் வைக்குமாறு வவுனியா நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

வவுனியாவுக்குக் கடந்த வெள்ளிக்கிழமை காலை வருகை தந்த ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மாநகர சபை கலாசார மண்டபத்தில் அரச அதிகாரிகள் மற்றும் பொதுமக்களுடனான கலந்துரையாடலில் ஈடுபட்டிருந்தார்.

ஜனாதிபதியின் விஜயத்துக்கு எதிர்ப்புத் தெரிவித்து கலந்துரையாடல் இடம்பெற்ற மண்டபத்துக்குச் செல்லும் பாதையில் வடக்கு - கிழக்கு வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோர் உறவுகளின் சங்கத்தினர் கறுப்புக் கொடிகளை ஏந்தியவாறு தமது எதிர்ப்புப் போராட்டத்தை முன்னெடுத்திருந்தனர்.

காணாமல் ஆக்கப்பட்டோர் உறவுகளின் சங்கத்தின் தலைவியான சி.ஜெனிற்றாவுக்குப் போராட்டம் எதனையும் முன்னெடுப்பதற்கு நீதிவான் நீதிமன்றம் தடை விதித்திருந்த நிலையிலும் அவரும் போராட்டத்தில் கலந்துகொண்டிருந்தார்.

போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் ஜனாதிபதியுடன் கலந்துரையாடுவதற்காக நிகழ்வு இடம்பெற்ற மண்டபத்துக்குள் செல்ல முற்பட்டபோது அவர்களைத் தடுத்து நிறுத்திய பொலிஸார், ஜனாதிபதியைச் சந்திப்பதற்கு அனைவருக்கும் அனுமதி வழங்க முடியாது என்றும், ஒருவருக்கு மாத்திரம் அனுமதி வழங்க முடியும் என்றும் தெரிவித்தனர்.

இதனை மறுத்த காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள், அனைவரையும் அனுமதிக்குமாறு கோரி போராட்டத்தில் ஈடுபட்டனர். இதனால் பொலிஸாருக்கும் போராட்டக்காரர்களுக்கும் இடையில் முரண்பாடு ஏற்ப்பட்டது.

இதனையடுத்து வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோர் சங்கத்தின் தலைவியான சி.ஜெனிற்றா மற்றும் போராட்டத்தை வீடியோ எடுத்த மீரா ஜாஸ்மின் ஆகிய இருவரும் பொலிஸாரால் கைது செய்யப்பட்டனர்.

கைது செய்யப்பட்ட இருவர் மீதும் நீதிமன்றக் கட்டளையை அவமதித்தமை, பொலிஸாரின் கடமைக்கு இடையூறு ஏற்படுத்தியமை, அமைதிக்குப் பங்கம் விளைவித்தமை போன்ற பல்வேறு குற்றச்சாட்டுக்களில் வவுனியா பொலிஸார் அவர்களை நீதிமன்றில் முன்னிலைப்படுத்தியபோது காணாமல் ஆக்கப்பட்டோர் உறவுகளின் சங்கத்தின் தலைவியான சி.ஜெனிற்றாவை எதிர்வரும் 8ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறும், போராட்டத்தை வீடியோ எடுத்த பெண்ணுக்குப் பிணை வழங்கியும் வவுனியா நீதவான் நீதிமன்றம் உத்தரவு பிறப்பித்திருந்தது.

இன்று மீண்டும் வழக்கு விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட போது, காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகளின் சங்கத்தின் தலைவியான சி.ஜெனிற்றாவை நீதிமன்றில் ஆஜர்படுத்திய சமயத்தில் அவரைக் கைது செய்த நடவடிக்கையின்போது இரு பொலிஸார் மீது தாக்குதல் மேற்கொண்டு அவர்கள் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டிருந்தமையால் பொலிஸார் மீது தாக்குதல் மேற்கொண்ட குற்றச்சாட்டிலும், நீதிமன்ற உத்தரவை மீறிய குற்றச்சாட்டிலும் காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகளின் சங்கத்தின் தலைவியான சி.ஜெனிற்றாவை எதிர்வரும் 12ஆம் திகதி வரை விளக்கமறியளில் வைக்குமாறு வவுனியா மாவட்ட நீதிவான் நீதிமன்றம் உத்தரவு பிறப்பித்துள்ளார்.

**வடக்கில் இருந்து...**

ஈ. சரவணபவன், எம்.கே.சிவாஜிலிங்கம், யாழ். மாநகர முன்னாள் மேயர் வி.மணிவண்ணன் மற்றும் வேலன் சுவாமிகள் உள்ளிட்ட எழு பேரே வழக்கில் இருந்து விடுதலை செய்யப்பட்டனர்.

தேர்தல் காலத்தில் போராட்டம் நடத்தியமை, பொது மக்களுக்கு இடையூறு ஏற்படுத்தியமை உள்ளிட்ட குற்றச்சாட்டில் 7 பேருக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது.

அத்துடன், கடந்த ஆண்டு யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற தேசிய தைப் பொங்கல் விழாவில் பங்கேற்பதற்காக வருகை தந்த ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு எதிராகப் போராட்டத்தில் ஈடுபட்ட குற்றச்சாட்டில் பொலிசாரால் கைது செய்யப்பட்ட வேலன் சுவாமிகள் உள்ளிட்ட சிலருக்கு எதிரான வழக்கு விசாரணையும் யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றில் இடம்பெற்று வந்தது.

மேற்படி இரண்டு வழக்குகளும் யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றத்தில் இன்று திங்கட்கிழமை எடுத்துக்கொள்ளப்பட்டது.

வழக்கு தொடர்பாக பொலிஸார் சட்டமா அதிபரின் ஆலோசனையைப் பெற வேண்டும் எனத் தெரிவித்தபோது பிரதிவாதிகள் சார்பாக ஆஜரான சட்டத்தரணி இரண்டு வழக்குகளையும் கிடப்பில் போட்டு அனைவரையும் விடுதலை செய்யுமாறு வேண்டுகோள் விடுத்தார்.

இதனையடுத்து இரண்டு வழக்குகளையும் கிடப்பில் போட்ட நீதிமன்றம் பிரதிவாதிகள் அனைவரையும் விடுதலை செய்து உத்தரவிட்டது.

இந்த வழக்குகளில் பிரதிவாதிகள் சார்பில் ஜனாதிபதி சட்டத்தரணி கே.வி. தவராசாவுடன் சட்டத்தரணி பிருந்தா சந்திரகேஷ் ஆஜராகியிருந்தார்.

**மக்களை வதைக்கும்...**

இலங்கை பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு, மின்சார சபை, மின் சக்தி அமைச்சர், அந்த அமைச்சின் செயலாளர் உள்ளிட்ட தரப்பினர் இந்த மனுவின் பிரதிவாதிகளாகப் பெயரிடப்பட்டுள்ளனர்.

இலங்கை மின்சார சபைக்கு 52 பில்லியன் ரூபா இலாபம் கிடைத்துள்ளது. எனினும், நியாமற்ற வகையில் மின்சாரக் கட்டணம் அதிகரிக்கப்பட்டதன் மூலம் 60 இலட்சம் மின்சார பாவனையாளர்களின் அடிப்படை உரிமை மீறப்பட்டுள்ளது எனத் தீர்ப்பளிக்கக் கோரி இந்த அடிப்படை உரிமை மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

மனுவைத் தாக்கல் செய்த பின்னர், அது தொடர்பில் உயர் நீதிமன்ற வளாகத்தில் ஊடகங்களுக்கு எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ கருத்துத் தெரிவித்தார்.

தான்தோன்றித்தனமாக மின்சாரக் கட்டணத்தை அதிகரித்து நாட்டு மக்களை வதைக்கும் ரணில் - மொட்டு அரசுக்கு விரைவில் முடிவு கட்டுவோம் என்று இதன்போது அவர் சூரைத்தார்.







# போலி நாணயத் தாள்களை அச்சிட்டு போதைப் பொருள் வாங்கியோர் கைது!

போலி ஆயிரம் ரூபா நாணயத் தாள்களை அச்சிட்டுப் போதைப் பொருள் வாங்கப் பயன்படுத்திய இருவரைப் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

சந்தேக நபர்களிடம் இருந்து 4 போலி 1000 ரூபா நாணயத் தாள்கள் பொலிஸாரால் மீட்கப்பட்டுள்ளன. அச்சடிக்க பயன்படுத்திய அச்சு இயந்திரமும் பொலிஸாரால் மீட்கப்பட்டுள்ளது.

சந்தேக நபர்களால் அச்சிடப்பட்ட போலிப் பணத்தை பல்வேறு முறைகளில் வேறு பணத்துடன் மாற்றி பின்னர் ஐஸ் போதைப் பொருள் பாவனைக்கு பயன்படுத்தியுள்ளனர் என்று தெரிய வந்துள்ளது.

மாளிகாவத்தை மற்றும் தெமட்ட கொட பிரதேசத்தை சேர்ந்த இருவரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளனர்.

ஆரம்பக்கட்ட விசாரணைகளின் போது சந்தேக நபர்கள் கிட்டத்தட்ட 50 ஆயிரம்ரூபாவைக்கைமாற்றியுள்ளமை தெரியவந்துள்ளது.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர்கள் நாளை நீதிமன்றில் முன்னிலைப்படுத்தப்படவுள்ளனர். சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை மாளிகாவத்தை பொலிஸார் ஆரம்பித்துள்ளனர்.



# ஹோமாகம தொழிற்சாலையில் வாயுக்கசிவு; சூழ உள்ளோரை மாஸ்க் அணிய அறிவுறுத்து!

கொழும்பு ஹோமாகம கைத்தொழில் வலயத்தை சுற்றியுள்ள மக்களை உடனடியாக முகக் கவசம் அணியுமாறு பொலிஸார் அறிவித்துள்ளது.

ஹோமாகம கைத்தொழில் வலயத்தில் தொழிற்சாலை ஒன்றில் ஏற்பட்ட கசிவு காரணமாக வாயு ஒன்று சுற்றுச் சூழலில் கலந்துள்ளது.

கடந்த சில மாதங்களுக்கு முன்னர் தீப்பிடித்த இந்தத் தொழிற்சாலையில் திருத்தப் பணிகள் இடம்பெற்று வரும் வேளையில் இன்று அதிகாலை இரண்டு மணியளவில் வாயு, புகையாகக் காற்றில் கலந்துள்ளது என்று பொலிஸார் தெரிவித்தனர்.

சுற்றுச்சூழலில் குளோரின் வாயு கலந்துள்ளதாக சந்தேகிக்கப்படுகிறது. இருப்பினும், தீயணைப்புத் துறை மற்றும் பேரிடர் மேலாண்மை உள்ளிட்ட சம்பந்தப்பட்ட அதிகாரிகள் அதிகாலை 5.30 மணியளவில் எரிவாயு கசிவைத் தடுக்கும் பணியில் ஈடுபட்டுள்ளனர்.

அந்தப் பகுதியில் புகைமூட்டம் பரவி வருவதால் ஹோமாகம கைத்தொழில் வலயத்தை சுற்றியுள்ள மக்கள் முகக் கவசம் அணியுமாறு சுகாதார திணைக்களமும் வேண்டுகோள் விடுத்துள்ளது.

# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்

259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com


## ரணில் கூறும் அதிகார பகிர்வு எது?

தமது தேசிய இனப் பிரச்சினைக்கான தீர்வு ஒன்றை கடந்த 75 ஆண்டுகளாக தமிழ் மக்கள் எதிர்பார்த்துக் காத்திருக்கிறார்கள். ஆனால் அதைத் தர முயற்சிக்கும் அல்லது அதைப் பற்றி சிந்திக்கும் எண்ணம் ஏதும் தற்போதைய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு அடியோடு கிடையாது என்பது தெளிவாகி வருகிறது.

அவர் பொருளாதார மீட்சி, அபிவிருத்தித் திட்டங்கள் குறித்தே வடக்கிற்கான தமது நான்கு நாள் விஜயத்தில் அதிகம் பேசி விட்டு சென்றிருக்கிறார். பேசி விட்டுச் சென்றிருக்கிறார் என்பதிலும் பார்க்க வடக்கு மக்களின் காதில் பூச்சுற்றி விட்டுச் சென்றிருக்கிறார் என்று கூறுவதுதான் பொருத்தம்.

கடைசியில் தமது ஐக்கிய தேசியக் கட்சியின் ஆதரவாளர்கள் மத்தியில் பேசுகையில் அரசமைப்பின்படி அதிகாரங்களைப் பகிரத் தான் தயார் என்றும் அவர் உறுதி மொழிந்திருக்கின்றார். கேட்கச்சிரிப்பாக இருக்கின்றது. வடக்கு மக்கள் அறிவற்ற முட்டாள்கள் என்று நினைத்துத்தான் அவர் பேசுகின்றார் என இப்பத்தியில் நாம் முன்னர் குறிப்பிட்டமையை, ஒன்றுக்குப் பல தடவைகள் அவர் உண்மையாக்கி விட்டுத்தான் சென்றிருக்கிறார்.

முப்பத்தியைந்து வருடங்களுக்கு முன்னர் அவரின் மாமனார் ஜே.ஆர். ஜெயவர்தன ஜனாதிபதியாக இருந்த போது - அந்த அரசில் அவரும் அமைச்சராக இருந்த சமயத்தில் - அரசமைப்பிற்குக் கொண்டுவரப்பட்ட 13 ஆம் திருத்த ஏற்பாடுகள் இன்னமுமே முழுமையாக நடைமுறைப்படுத்தப்படவில்லை.

அப்படி அரசமைப்பில் உள்ள 13 ஆம் திருத்த விடயங்களை நடைமுறைப் படுத்துவதற்கு இப்போதைய நாடாளுமன்றத்தில் அனுமதி பெறப்பட வேண்டும் என்று புதிய - வினோதமான - அரசமைப்புப் பாடத்தை அண்மை காலத்தில் தமிழ் மக்களுக்கும் - நாட்டு மக்களுக்கும் - போதித்தவர் அவர்தான். இப்போது அந்தகூற்றுக்கு மாறாக, அரசமைப்பின்படி அதிகாரப் பரவலாக்கத்தை தருவேன் என்று கயிறு விடுகின்றார். அவர் குறிப்பிடும் அந்த அதிகாரப் பரவலாக்கம் எது என்பதை அவர் திட்டவட்டமாக தெளிவு படுத்தி இருந்தால் நல்லது.

அண்மை காலம் வரை '13 மைனஸ்' பற்றித்தான் அவர் நாடாளுமன்றத்திலும் வெளியிலும் பேசி வந்தார். பொலிஸ் அதிகாரப் பகிர்வு 13ஆம் திருத்தத்தில் உள்ளது. ஆனால் அதை வழங்க முடியாது, எஞ்சியவற்றை வழங்குவது தொடர்பில் நாடாளுமன்றத்தின் அனுமதி பெறப்பட வேண்டும் என்றுதான் அவர் கூறி வந்தார். இப்போது கதையை சற்று மாற்றுகின்றார். 'சோழியன் குடுமி சும்மா ஆடவில்லை!'

இன்னும் பத்து மாதங்களில் ஜனாதிபதித் தேர்தல் வரப்போகின்றது. அதில் சிறுபான்மை மக்களின் - குறிப்பாக தமிழ் மக்களின் - வாக்குகளையும் பெற வேண்டிய கட்டாயம் அவருக்கு இருக்கின்றது. அவரின் பிரதான எதிர் வேட்பாளரான எதிர்க்கட்சித் தலைவரும் ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவருமான சஜித் பிரேமதாஸ அரசமைப்பில் உள்ள 13 ஆம் திருத்தத்தின் அடிப்படையிலான தீர்வைத் தருவேன் என்று திட்டவட்டமாக - உறுதியாக - ஒரு நிலைப்பாட்டை எடுத்து வெளிப்படுத்தி வருகின்றார்.

இந்த பின்புலத்தில் '13 மைனஸ்' என்ற தமது அறிவிப்புத் தமிழர் தரப்பில் தமக்கு எதிரான கருத்து நிலைப்பாட்டை உருவாக்கிவிட்டது என்பதை உணர்ந்து கொண்டுள்ள ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அதனால் இப்போது அரசமைப்பில் உள்ள அதிகாரப் பகிர்வைத் தருவேன் என்று புதிய கயிறு விடுகின்றார்.

அரசமைப்பில் 13 ஆவது திருத்தத்தின் கீழ் மாகாண சபைகளுக்கு பொலிஸ் அதிகாரம், காணி அதிகாரம் என்பன சட்ட ரீதியாக பகிர்ந்து அளிக்கப்பட வேண்டும். அரசமைப்பின்படி அதிகார பகிர்வு என்று கூறும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அதன் அடிப்படையில் பொலிஸ், காணி அதிகாரங்களும் மாகாணங்களுக்கு வழங்கப்படுவதை உறுதிப் படுத்துவாரா? இதை அவர் தெளிவான வார்த்தைகளில் மக்களுக்கு வெளிப் படுத்த வேண்டும். இனிமேலும் மயக்கமான கருத்துக்களைச் சொல்லிக் குழப்புவதை விடுத்து.




# சுவாச நோய்களுக்குத் தேவையான மருந்துகளுக்கு ஏற்பட்டது தட்டுப்பாடு!

அரச வைத்தியசாலைகளில் சுவாச நோய்களுக்குத் தேவையான பல மருந்துகள் தட்டுப்பாடு ஏற் பட்டுள்ளன.

குளிர் காலநிலையால் நோயா ளர்கள் கடும் அவதிக்குள்ளாகி வரு கின்றனர்.

அகில இலங்கை வைத்திய அதிகாரிகள் சங்கம் இந்த விடயத் தைத் தெரிவித்துள்ளது.

இவ்விடயம் தொடர்பாக சங்கத்தின் செயலாளர் ஜயந்த பண்டார தெரி விக்கையில்,

நிலவும் சீரற்ற காலநிலையுடன் ஆஸ்துமா, ஆஸ்துமா உள்ளிட்ட சுவாச நோய்கள் மற்றும் சுவாச அமைப்பு தொடர்பான தொற்று நோய்கள் அதிகரித்துள்ளன.

இந்த நிலையில் அரச வைத்தி யசாலைகளில் சுவாச நோய்களுக்கு தேவையான பல மருந்துகள் தட்டுப் பாடு ஏற்பட்டுள்ளது.

ஆண்டிஹிஸ்டெமின்கள், ஸ்டெராய்டுகள், ஆன்டிபைட்டிக்குகள் மற்றும் ப்ரோன்கோடைலேட்டர்கள் மற்றும் ஒரு மருந்தின் பல்வேறு தயாரிப்புகள், (டேப்லெட், கேப்ஸ்யூல், சிரப், நெபுலைசர் ஸ்லௌஷன், டிபி கேப்ஸ்யூல், எம்டிஐ இன்ஹேலர் போன்றவை) சுவாச நோய்களுக்கு பொதுவாகப் பயன்படுத்தப்படும் மருந்துகளுக்குப் பெரும் தட்டுப்பாடு நிலவுகின்றது.-என்றார்.

# ஓட்டோவில் பயணித்த பெண் ஒருவர் சாரதியைக் கொலை செய்ய முயற்சி!

## பொலிஸாரால் கைது செய்யப்பட்டார்

இரத்தினபுரி - கொடகவெல பகுதியில் பயணம் செய்ய வேண்டும் என்று கூறி ஓட்டோவில் ஏறிய பெண், சாரதியை கொலை செய்துவிட்டு ஓட் டோவைக் கொள்ளையடிக்க முயற் சித்துள்ளார் என்று பொலிஸார் தெரி வித்துள்ளனர்.

ஓட்டோ சாரதியின் கழுத்தில் துணி யால் கட்டி அழுத்தியதுடன், முகத்தை மூடிக் கொண்டு கொள்ளைய டிக்க முயன்றுள்ளார் என்றும் பொலி ஸார் தெரிவித்துள்ளனர். இந்தக் குற்றச்சாட்டுகள் தொடர்பிலேயே அந்தப் பெண் கைது செய்துள்ளார்.



கொடகவெல நகரில் இருந்து ஓட்டோவில் ஏறிக்கொண்ட யுவதி, கொடகவெல ரன்வல வீதியில் இரண்டு கிலோ மீற்றர் பயணித்த நிலையில், ஓட்டோ சாரதியின் கழுத்தில் துணியால் அழுத்தப்பட்டதாக சாரதி பொலிஸாரிடம் தெரிவித்துள்ளார்.

அப்போது ஓட்டோவைக் கட்டுப்படுத்த முடியாத நிலைமை சாரதிக்கு ஏற்பட்டுள்ளது. இதனால் வீதியில் பயணித்த மோட்டார் சைக்கிள் மீது மோதியுள்ளார். ஓட்டோ வீதியை விட்டு விலகி நின்றுள்ளது. அங்கு வந்த கிராம மக்கள் சந்தேகமடைந்த நிலையில் அந்தப் பெண்ணைப் பிடித்துப் பொலிஸாரிடம் ஒப்படைத்துள் ளனர்.



# இலங்கையைக் கட்டியெழுப்பும் அபிவிருத்தியில் இணையுங்கள்

## பல்கலைக்கழக மாணவர்களுக்கு ஜனாதிபதி அழைப்பு

விவசாயம், சுற்றுலா, வர்த்தகம் மற்றும் தொழில்நுட்பம் உள்ளிட்ட பல்வேறு துறைகளின் அபிவிருத்திக்காகப் பல்கலைக்கழக மாணவர்களின் பங்களிப்பை எதிர்பார்ப்பதாகத் தெரிவித்த ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, இந்த முயற்சிகளில் தீவிரமாக இணைந்துகொள்ளுமாறும் பல்கலைக்கழக மாணவர்களுக்கு அழைப்பு விடுத்தார்.

யாழ். பல்கலைக்கழக மாணவர்களுடன் யாழ். ஜெட்விங் ஹோட்டலில் நடைபெற்ற சந்திப்பில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே ஜனாதிபதி இதனைக் குறிப்பிட்டார்.

நாட்டின் அபிவிருத்திக்காகப் பல்கலைக்கழக சமூகத்திற்கு வழங்கப்பட்டுள்ள முன்னணி பங்களிப்பு குறித்து தெளிவுபடுத்தும் நோக்கில் இந்தச் சந்திப்பு இடம்பெற்றது.

நாட்டின் தேசிய பொருளாதாரத்துக்குப் பாரிய பங்களிப்பை வழங்கும் வகையில் வடக்கு மாகாணத்தில் பாரிய அபிவிருத்திகளை மேற்கொள்வதற்கான அரசின் வேலைத்திட்டம் குறித்து மாணவர்களுக்குத் தெளிவுபடுத்திய ஜனாதிபதி, இந்த நிகழ்ச்சித் திட்டத்தை வெற்றியடையச் செய்வதற்கு மாணவர்களை ஒன்றிணையுமாறும் கேட்டுக்கொண்டார்.

மனித வளமே ஒரு நாட்டின் அபிவிருத்திக்கு உந்து சக்தியாக அமைகின்றது என்று சுட்டிக்காட்டிய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, நவீன தொழில்நுட்பத்தை மையப்படுத்தி அரச மற்றும் தனியார் பல்கலைக்கழகங்களை உருவாக்குதல் உள்ளிட்ட உயர்கல்வித் துறையை விரிவுபடுத்துவதற்கான அரசின் திட்டங்கள் குறித்து இதன்போது மாணவர்களுக்குத் தெளிவுபடுத்தினார்.

**(09 ஆம் பக்கம் பார்க்க)**















# இலங்கையைக் கட்டியெழு...

(08 ஆம் பக்கத் தொடர்ச்சி)

டிஜிட்டல் தொழில்நுட்பம் மற்றும் செயற்கை நுண்ணறிவு போன்ற துறைகளில் விரைவான முன்னேற்றத்தின் அவசியத்தையும் ஜனாதிபதி விளக்கினார்.

ஒரு நாடு என்ற ரீதியில் பிராந்திய ஒத்துழைப்பின் முக்கியத்துவத்தை வலியுறுத்திய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, கொழும்பு மற்றும் திருகோணமலை துறைமுகங்களை வலுவான துறைமுகங்களாக மாற்றுவதற்கான திட்டங்கள் குறித்தும் கலந்துரையாடினார்.

தென்னிந்தியாவையும் இலங்கையையும் இணைக்கும் வகையில் மன்னாரிலிருந்து இந்தியாவுக்கான நில ரீதியிலான தொடர்பை ஏற்படுத்துவது குறித்து இந்தியப் பிரதமர் நரேந்திர மோடியுடன் தான் கலந்துரையாடியதாகவும் ஜனாதிபதி குறிப்பிட்டார்.

2025 ஆம் ஆண்டளவில் 5 வீத பொருளாதார வளர்ச்சியை அடைவதன் இலக்கையும் 2030 ஆம் ஆண்டளவில் படிப்படியாக அதனை 7 - 8 வீதமாக அதிகரிப்பதன் இலக்கு குறித்தும் விளக்கமளித்த ஜனாதிபதி, இலங்கை உயர் பொருளாதார வளர்ச்சி வீதத்தை விரைவில் அடைய வேண்டியதன் அவசியத்தையும் வலியுறுத்தினார்.

வளமான மற்றும் அபிவிருத்தியடைந்த இலங்கையைக் கட்டியெழுப்புவதற்கு அனைவரும் ஒன்றிணைய வேண்டியதன் அவசியத்தை மேலும் வலியுறுத்திய ஜனாதிபதி, பல்கலைக்கழக மாணவர்களும் அந்தப் பொறுப்பை நிறைவேற்ற அர்ப்பணிப்புடன் செயற்படுவார்கள் என்றும் நம்பிக்கை தெரிவித்தார்.

இதன்போது மாணவர்களால் எழுப்பப்பட்ட கேள்விகளுக்கு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பதிலளித்தார்.





# போதைப் பொருள் கடத்துவோர் தொடர்பில் பொலிஸாரது நடவடிக்கைகளில் சந்தேகம்!

## முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ஹிருணிகா தெரிவிப்பு

போதைப் பொருள் கடத்தல்காரர் களை கைது செய்வதற்குப் பொலி ஸார் மேற்கொண்டுவரும் யுக்திய நட வடிக்கை தொடர்பில் சந்தேகம் எழுந் துள்ளது என்று முன்னாள் நாடாளு மன்ற உறுப்பினர் ஹிருணிகா பிரேமச் சந்திர தெரிவித்துள்ளார்.

போதைப்பொருள் கடத்தல்காரர்களை கைது செய்வதற் கான சோதனைகள் நடவடிக்கையின் போது சில பகுதிகளில் சோதனைகள் மேற்கொள்ளப்படவில்லை என்று அவர் குற்றம் சாட்டியுள்ளார்.

போதைப்பொருள் வியாபாரத் தில் ஈடுபடும் அரசியல்வாதிகள் இருப்பதை அனைவரும் அறிந்துள் ளனர். அவர் கள் தெமட்டகொட போன்ற பகுதிகளில் வலுவாக செயற்படுகின் றனர்.

இந்தநிலையில், தெமட்டகொடையில் பாதாள உலகக் குழுத் தலைவர் ஒரு



வரால் பதில் பொலிஸ் மா அதிபர் தேஷ பந்து தென்னகோனுக்கு வாழ்த்துத் தெரிவிக்கும் அறிவிப்புப் பலகை ஒன்று நிறுவப்பட்டுள்ளது.

இவ்வாறான நிலையில் பொலி ஸார் மீது சந்தேகமே எழுந்துள்ளது. அதேவேளை, குறித்த பகுதியில் போதைப் பொருள் தேடும் நடவடிக்கை களை பொலிஸார் மேற்கொள்ளவில்லை எனவும் சுட்டிக்காட்டியுள்ளார்.

## செங்கடலைப் பாதுகாக்க இலங்கைக் கடற்படை:

# ஜனாதிபதியின் கருத்துக்கு கலீலுர் ரஹ்மான் எதிர்ப்பு!

செங்கடலைப் பாதுகாப்பதற்கு இலங்கைக் கடற்படையினரை ஈடு படுத்தும் தீர்மானம் தொடர்பில் ஜனாதிபதியின் கருத்துக்கு கொழும்பு மாநகர சபையின் முன்னாள் உறுப் பினர் கலீலுர் ரஹ்மான் எதிர்ப்பு தெரி வித்துள்ளார்.

அந்த தீர்மானத்தின் மூலம் பாலஸ்தீன மக்களின் சுதந்திரப் போராட்டம் தொடர்பான அண்மைக்கால நிலைப்பாடு தொடர்பில் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க முரண்படுகின்றார் என்றும் அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

இது தொடர்பில் கலீலுர் ரஹ்மான் அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளார். அந்த அறிக்கையில் குறிப்பிடப் பட்டுள்ளவை வருமாறு,

ஜனாதிபதியின் தீர்மானம் தொடர் பில் நாடாளுமன்றத்தின் பெரும் பான்மை சம்மதத்தை ஆராய்ந்தால் பாலஸ்தீன விடுதலைப்போர் தொடர்பில் இரட்டை வேடம் போடும் அரசியல் சக்திகளின் அப்பட்டமான நிலையை காணமுடியும்.

செங்கடலைப் பாதுகாக்க கடற் படையை நிறுத்துவதற்கு முன், ஜனாதிபதி நாடாளுமன்றத்தைக் கூட்டினால், இது தொடர்பாக கட்சிகள்



மற்றும் எதிர்க்கட்சிகளின் கருத்துக் களைக் கேட்டு, மூன்றில் இரண்டு பெரும்பான்மையுடன் கடற்படையை நிலைநிறுத்த முடிவு செய்யலாம். இவ்வாறு செய்தால் முற்போக்கு மக்கள் பாலஸ்தீன சுதந்திரப் போராட்டம் தொடர்பாக இரட்டை மனப்பான்மை கொண்ட அரசியல் சக்திகளின் அப் பட்டமான நிலையை இந்த நாட்டில் பார்க்க முடியும்.

இலங்கையில் ஏற்பட்டுள்ள பொரு ளாதார நெருக்கடிக்குத் தீர்வு காண முடியாத சூழலில், லட்சக் கணக்கான தொழிலாளர்கள் வேலை செய்கிறார்கள் என்பதை அறியாமல் இவ்வாறான தீர்மானங்களை மேற்கொள்வதன் மூலம் நாட்டின் பொருளாதார வளர்ச்சிச் சவால்கள் மற்றும் இலட்சியங்களை நிறைவேற்ற முடியாது போகும்.

ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க உலக புவியியல் அரசியலில் முதிர்ச்சி யடைந்தவர். நாட்டின் பொருளாதார அபிவிருத்தியில் கவனம் செலுத்தி 75 வருட அரசியல் அதிகாரப் பகிர்வுப் பிரச்சினையைத் தீர்த்து இலங்கையைத் தெற்காசியாவில் வலுவான நாடாக மாற்றும் முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும்.

செங்கடல் வழித்தடத்தைக் கிளர்ச் சியாளர்கள் தடுத்து, பாலஸ்தீன மக் களை மரணத்தில் இருந்து காப்பாற்றும் மனித முகத்தை எதிர்க்க வேண்டாம்.

பாலஸ்தீன மக்களின் 75 ஆண்டு கால சுதந்திரப் போராட்டத்துக்காக, ஹவுதி கிளர்ச்சியாளர்கள் இன்று பேரம் பேசும் நோக்கில் எடுத்து வரும் போரில் மத்திய கிழக்கு நாடுகள் தலையிடாதது போல், மௌன நடைமுறையை கடைப்பிடிப்பதே இலங்கை முற்போக்கு மக்களின் எண்ணம்.– என்றுள்ளது.

# இனவாதமற்ற கூட்டணியாக ஐக்கிய மக்கள் சக்தி மலரும்

## சஜித்தான் ஜனாதிபதி வேட்பாளர் என்று அக்கட்சி திட்டவட்ட அறிவிப்பு

இனவாதமற்ற கூட்டணியாகவே ஐக்கிய மக்கள் சக்தி தலைமையிலான கூட்டணி மலரும் எனவும், எந்தவொரு தரப்புடனும் இரகசிய உடன்படிக்கை கைச்சாத்திடப்படவில்லை எனவும் ஐக்கிய மக்கள் சக்தியின் பொதுச் செயலாளர் ரஞ்சித் மத்தும பண்டார எம்.பி. தெரிவித்தார்.

இது தொடர்பில் ஊடகங்களிடம் கருத்து வெளியிட்ட அவர், மேலும் கூறியதாவது:-

"தூய்மையான அரசியல்வாதிகளே எம்முடன் இணைந்து வருகின்றனர். எதிர்காலத்திலும் மேலும் சிலர் இணையவுள்ளனர். பலமான - பரந்துபட்ட கூட்டணியை விரைவில் அமைத்துத் தேர்தலை எதிர்கொள்வோம்.



வெளிப்படைத் தன்மையுடன் செயற்படுகின்றோம். எந்தவொரு தரப்புடனும் இரகசிய உடன்படிக்கை இல்லை. அவ்வாறான இரகசிய உடன்படிக்கை தொடர்பில் எவரும் கோரிக்கை விடுக்கவும் இல்லை.

எமது கூட்டணியின் ஜனாதிபதி வேட்பாளர் சஜித் பிரேமதாஸதான்." - என்றார்.

# நெடுந்தீவில் மரக்கறிச் செய்கையில் கணிசமான விளைச்சல் கிடைத்தது!

## விவசாயிகள் மகிழ்ச்சி தெரிவிப்பு

(சு.பாஸ்கரன்)

யாழ். நெடுந்தீவுப் பிரதேசத்தில் நெடுந்தீவு ஊரும் உறவும் அமைப்பின் "நல்வாழ்வு நம்கையில்" எனும் விவசாய செயற்றிட்டத்தின் மூலம் மேற்கொள்ளப்பட்ட பெரும் போகச் செய்கையில் கணிசமான விளைச்சல் கிடைத்துள்ளது என்று விவசாயிகள் மகிழ்ச்சி தெரிவித்துள்ளனர்.


நெடுந்தீவுப் பிரதேசத்தில் ஆரம்ப காலத்தில் தொடர்சியாக விவசாயச் செய்கைள் மேற்கொள்ளப்பட்டு வந்த நிலையில் கடந்த ஆண்டுகளில் விவசாய நடவடிக்கைகள் கைவிடப்பட்டிருந்தன.

மக்களின் போசாக்கு மற்றும் உணவு உற்பத்தியை ஊக்குவிக்கும் வகையில். நெடுந்தீவு ஊரும் உறவும் அமைப்பின் "நல்வாழ்வு நம்கையில்" எனும் விவசாய செயற்றிட்டத்தின் மூலம் நெடுந்தீவு பிரதேத்தில் அதிகளவான இடங்களில் விவசாய நடவடிக்கைகள் முன்னெடுக் கப்பட்டுள்ளது.

இவ்வாறு மேற்கொள்ளப்பட்ட பெரும் போகச் செய்கையில் கணிசமான விளைச்சல் கிடைத்துள்ளது என்று விவசாயிகள் தெரிவித்துள்ளனர். அண்மையில் அறுவடையும் நடைபெற்றது.

அதாவது தற்போதைய பெரும் போகத்தில் வெங்காயச் செய்கை மற்றும் மிளகாய், கத்தரி, பூசணி, கீரை போன்ற பயிர் செய்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.





# மின் கட்டணம் செலுத்தத் தவறிய 8 லட்சம் இணைப்புக்கள் துண்டிப்பு

## பொருளாதார நெருக்கடியை தணிக்கும் துறைசார் கண்காணிப்புக் குழு தகவல்

ஒரு வருட காலப் பகுதியில் மின்சார கட்டணத்தை செலுத்த தவறிய 8 லட்சம் பேரின் மின்சார இணைப்புக்கள் துண்டிக்கப்பட்டுள்ளன என்று பொருளாதார நெருக்கடியை தணிக்கும் துறைசார் கண்காணிப்புக் குழுவின் தகவல்கள் தெரிவிக்கின்றன.

அண்மையில் நடைபெற்ற குழுக் கூட்டத்திலேயே இந்த விடயம் தொடர்பில் கவனத்தில் கொள்ளப்பட்டது என்று தெரிவிக்கப்படுகின்றது.

இந்த நிலையில், துண்டிக்கப்பட்ட இணைப்புக்களில் பெரும்பாலானவை ஏழை மக்களது இணைப்புக்கள் என்பது தெரியவந்துள்ளது.

துறைசார் கண்காணிப்புக்குழு மேலும் குறிப்பிட்டுள்ளதாவது,

மின் துண்டிப்பால் குழந்தைகளின் ஊட்டச்சத்து முதல் மாணவர்களின் கற்றல் நடவடிக்கைகள் வரை பாதிக்கப்பட்டுள்ளன.

இந்த நிலைமையால் எதிர்காலத்தில் பாதிக்கப்பட்ட சமூக அமைப்பு உருவாகுவதற்கு ஏதுவான சூழலாக இது காணப்படும்.

எனினும், நிர்ணயச் செலவுக்கு ஏற்ற விலையாக மின் கட்டணத்தை மாற்ற வேண்டும்.

இதன்படி, இந்த மாதம் முதல் 03 மாத காலத்துக்கு மின் கட்டணத்தை வகுக்கும் வகையில் கட்டணத்தை குறைக்க மின்சார சபைக்கு உத்தரவிடுவது, வறுமையால் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு சிறப்பு நியாய அலகு முறையை அறிமுகப்படுத்துவது மற்றும் தேசிய பொருளாதாரத்தை வலுப்படுத்தும் வகையில் தொழில் முறையைப் பாதுகாக்கும் விலைக் கொள்கையை விரைவாக அறிமுகப்படுத்த வேண்டும்.– என்று தெரிவித்துள்ளது.

# போதைப் பொருள் வர்த்தகர் மூவரது சொத்துகள் பறிமுதல் செய்யப்பட்டன

## பதில் பொலிஸ் மா அதிபர் தேசபந்து தென்னக்கோன் தகவல்



இலங்கையில் போதைப் பொருள் வர்த்தகத்தில் ஈடுபட்ட மூன்று பேரின் சொத்துகள் கைப்பற்றப்பட்டுள்ளன என்று பதில் பொலிஸ் மா அதிபர் தேசபந்து தென்னக்கோன் தெரிவித்துள்ளார்.

ஜாஎல மற்றும் மாலம்பே பகுதிகளில் இருந்த அவர்களின் சொத்துக்கள் மற்றும் காணிகள் இவ்வாறு கைப்பற்றப்பட்டுள்ளன என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதன்படி குடு ரொஸான், கவிந்து மதுரங்க மற்றும் ஹெட்டியாரச்சிகே சிறில் ஆகிய மூன்று பேரின் சொத்துக்கள் இவ்வாறு கைப்பற்றப்பட்டுள்ளன என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

யுக்திய பொலிஸ் தேடுதல் வேட்டையின் மூலம் இவ்வாறு சொத்துக்கள் கைப்பற்றப்பட்டுள்ள நிலையில், ஜீப் வண்டிகள், வான், கார்கள், ஓட்டோ உள்ளிட்ட பல்வேறு வாகனங்களும் கைப்பற்றப்பட்டுள்ளன என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.



# 21 வயதுக்குள் பட்டம் பெறும் வகையில் கல்வித் திட்டங்கள் மாற்றப்பட வேண்டும்

## தென் கிழக்குப் பல்கலைக்கழகத்தில் நடைபெற்ற கூட்டத்தில் சபீஸ் வலியுறுத்து

(நூருல் ஹுதா உமர்)

இன்று உலகம் மாறிவிட்டது. அதற்கேற்றால் போல் நாமும் மாறவேண்டும். ஒரு காலத்தில் தலைவர்கள் கட்டளை பிறப்பிப்பவர்களாக இருந்தனர். இன்று தலைவர்கள் நல்லதொரு பயிற்றுவிப்பாளராக உருவாக்கப்பட்டு இருக்கின்றார்கள். அவர்கள் எந்த இடத்தில் யாரை நியமிக்கவேண்டும் எனத் தீர்மானிக்கின்றனர். முன்னர் தனி ஒருவர் தீர்மானங்களை மேற்கொண்டார். இன்று ஒரு குழு இருந்து தீர்மானங்களை மேற்கொள்ளும் முறைக்கு உலகம் மாறிவிட்டது.

ஒரு மாணவன் தனது முதல் பட்டப்படிப்பை 21 வயதுக்குள் நிறைவு செய்து அவன் ஒரு தொழிலை உருவாக்கி 10 பேருக்கு தொழில் வழங்கும் அளவுக்குக் கல்வித் திட்டங்கள் மாற்றம் பெற வேண்டும்.

இவ்வாறு அக்கறைப்பற்று மாநகர சபை முன்னாள் உறுப்பினர் எஸ்.எம். சபீஸ் தெரிவித்தார்.

உண்மை மற்றும் நல்லிணக்கத்துக்கான இடைக்கால செயலகத்துக்கும் அம்பாறை மாவட்ட பொது அமைப்புக்



களின் பிரதானிகள், கல்விமான்கள் ஆகியோருக்கும் இடையிலான சந்திப்பொன்று இலங்கை தென்கிழக்கு பல்கலைக்கழகத்தில் நேற்று முன்தினம் நடைபெற்றது. இங்கு கருத்து தெரிவிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு அவர் தொடர்ந்து கருத்துத் தெரிவிக்கையில்,

மக்களிடம் இருந்தும் கருத்துக்களை எடுத்துச் சட்டங்களை இயற்றுவதற்கு அரசு இப்போதாவது எத்தனித்துள்ளமையை எண்ணிச் சந்தோசமடைகின்றோம். நமது நாட்டில் காணப்படும் கல்வி முறையில் உடனடி மாற்றங்களை செய்ய வேண்டும். ஒரு மாணவன் தனது முதல் பட்டப்படிப்பை 21 வயதுக்குள் நிறைவு செய்து அவன் ஒரு தொழிலை உருவாக்கி 10 பேருக்கு தொழில் வழங்கும் அளவுக்குக் கல்வித் திட்டங்கள் மாற்றம் பெறவேண்டும்.

ஆண்டு ஒண்டு தொடக்கம் பல்கலைக்கழகம்வரை கல்வி கற்றுவிட்டு மீண்டும் அரசிடமே ஒரு தொழிலுக்காகக் காத்திருக்கும் கல்வி முறையை எதற்காக வைத்திருக்கின்றோம். இந்த நாட்டின் ஒவ்வொரு பிரஜையும் பட்டதாரிகளாக வரவேண்டும். சிறு தேநீர்கடை வைத்திருப்பவருக்குக் கூட அக்கடையில் விளம்பரம், களஞ்சியம், கணக்கு, சம்பளம், என எத்தனையோ விடயங்கள் இருக்கின்றன. அவைகளை முறையாக செய்வதற்கு அவர்கள் கல்வி அறிவு படைத்தவர்களாக இருக்க வேண்டும்.

ஆரம்ப கல்வி முறைகளில் மாற்றம் என்பது இன்றியமையாதது. ஆரம்பக் கல்வி முறையில் மாற்றங்களைக் கொண்டுவர வேண்டும். இதற்கு ஆரம்ப பாடசாலைகளுக்குப் பட்டதாரிகளை ஆசிரியர்களாக நியமிக்க வேண்டும்.- என்றார்.

# தோட்டத்தில் இருந்து லீட்ஸ் திருடிய இருவர் கைதாகினர்!

## எதிர்வரும் 10 ஆம் திகதிவரை விளக்க மறியல்

(மஸ்கெலியா நிருபர்)

மஸ்கெலியா பொலிஸ் பிரிவில் உள்ள சாமிமலை ஓல்டன் தோட்ட 10 நம்பர் பிரிவில், நேற்று முன்தினம் இரவு தோட்டத்தில் பயிரிடப்பட்டு அறுவடைக்காக இருந்த 300 கிலோ லீட்ஸ் திருட்டுப் போயுள்ளது.

அவற்றை நோர்வூட் நகரில் விற்பனை செய்த இருவரை மஸ்கெலியா பொலிஸார் கைது செய்துள்ளனர் என்று பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி புஷ்பகுமார தெரிவித்தார்.

அவர் மேலும் கூறுகையில்,

சம்பவத்துடன் தொடர்புடைய கவரவலை தோட்டத்தில் வசிக்கும் இருவர் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டனர். அவர்களிடம் விசாரணை மேற்கொண்ட போது தாங்கள் களவாடி நோர்வூட் நகரில் விற்பனை செய்ததை ஒப்புக் கொண்டனர்.

அனைத்து தொடர்ந்து சந்தேக நபர்கள் இருவரும் ஹட்டன் நீதிமன்ற பதில் நீதிவான் விநாயகமூர்த்தி முன்னிலையில் ஆஜர்படுத்தப்பட்டனர். அவர்களை எதிர்வரும் 10 ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிடப்பட்டது.



# மன்னார் முன்னாள் ஆயருக்கு சிலை நேற்றுத் திறந்து வைப்பு

(மன்னார் நிருபர்)

மறைந்த, மன்னார் மறை மாவட்ட முன்னாள் ஆயர் மேதகு இராயப்பு யோசேப்பு ஆண்டகையின் நினைவுச் சிலை மன்னார் ஜோசப் வாஸ் நகரில் அமைக்கப்பட்டு நேற்று ஞாயிற்றுக்கிழமை (07) மாலை வைபவ ரீதியாக திறந்து வைக்கப்பட்டது.

மன்னார் ஜோசப் வாஸ் நகர் பங்கு மக்களால் அமைக்கப்பட்ட அந்த நினைவுச் சிலையை மன்னார் மறை மாவட்ட ஆயர் மேதகு இம்மானுவேல் பெர்னாண்டோ ஆண்டகை வைபவ ரீதியாகத் திறந்து வைத்தார்.

நிகழ்வில் அருட்தந்தையர்கள், நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன், பங்கு மக்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.





# மின்சாரசபை ஊழியர்கள் போன்று நடித்து பாவனையாளரிடம் சூறையாடப்பட்ட பணம்!

## சந்தேக நபர்களைத் தேடிப் பொலிஸார் வலை வீச்சு

(அஸ்ஹர் இப்றாஹிம்)

இலங்கை மின்சாரசபை ஊழியர்கள் போன்று நடித்து முல்லைத்தீவு, உடப்பு குளம் உட்பட சுற்றயல் பிரதேசங்களிலுள்ள மின் பாவனையாளர்களிடம் இருந்து சுமார் 3 லட்சத்துக்கும் அதிகமான பணம் அபகரிக்கப்பட்டுள்ளது. அவர்களுக்குப் போலிப் பற்றுச் சீட்டுக்களை வழங்கியுள்ளனர்.

அந்தச் சந்தேக நபர்களைத் தேடிப் பொலிஸார் வலை வீசியுள்ளனர்.

இலங்கை மின்சார சபை ஊழியர்கள் போன்று நாடகமாடி அப்பாவி பாவனையாளர்களிடம் மின் பட்டியலைப் பார்வையிட்டுள்ளனர். பட்டியலிலுள்ள தொகையில் அரைவாசியை அல்லது முடியுமான தொகையை செலுத்தாது விட்டால் மின்சாரம் துண்டிக்கப்படும் என்று எச்சரித்துள்ளனர். இந்த நிலையில் பணம் செலுத்தியவர்களுக்குப் போலிப் பற்றுச் சீட்டுகளைக் கொடுத்துள்ளனர்.

மூன்று தினங்கள் கழித்து உண்மையான இலங்கை மின்சார சபை ஊழியர்கள் வருகை தந்தபோது போலியான பற்றுச் சீட்டு வழங்கி பாவனையாளர்களின் பணம் சூறையாடப்பட்டுள்ளமை தெரியவந்துள்ளது.

மின்சார சபைக்கும் பொலிஸாருக்கும் இது தொடர்பில் அறிவித்ததைத் தொடர்ந்து பொலிஸார் சந்தேக நபர்களைத் தேடிக் கண்டுபிடிக்கும் நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளனர்.

விசாரணைகள் முடியும்வரை பாதிக்கப்பட்ட பாவனையாளர்களின் மின் இணைப்பை துண்டிக்க வேண்டாம் என்று இலங்கை மின்சார சபை அறிவித்துள்ளது.



# மன்னார் மாவட்டத்தில் டெங்கு ஒழிப்பு!

(மன்னார் நிருபர்)

மன்னார் மாவட்டத்தில் அதிகரித்து வரும் டெங்கு பரவலை கட்டுப்படுத்தும் நோக்கில் பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனை, மன்னார் பிராந்திய சுகாதார வைத்திய அதிகாரி பணிமனை மற்றும் பிரதேச செயலகம், மாவட்ட செயலகம் இணைந்து டெங்கு ஒழிப்பு நடவடிக்கையை நேற்று ஞாயிற்றுக் கிழமை மன்னார் பிரதேச வைத்திய அதிகாரி பிரிவில் பல இடங்களில் முன்னெடுத்தன.

வீடுகள் மற்றும் பொது இடங்களில் டெங்கு நுளம்பு பரவக் கூடிய சூழல்களை அடையாளப்படுத்தல், மற்றும் அவற்றை அப்புறப்படுத்துதல், அதே நேரம் நுளம்பு பெருக்கத்துக்கான சூழல் காணப்படும் வீடுகளின் உரிமையாளர்களை அடையாளப்படுத்தும் முகமாக சுகாதார வைத்திய அதிகாரிகள், பிரதேச செயலக உத்தியோகத்தர்கள், டெங்கு ஒழிப்பு செயலணி உத்தியோகத்தர்கள், பாதுகாப்பு துறையினர் விசேட கள விஜய செயற்பாடுகளையும் முன்னெடுத்தனர்.

மன்னார் பிராந்திய சுகாதார சேவை பணிமனை மற்றும் டெங்கு பரவல் அதிகமாக உள்ள பகுதிகளில் பொது மக்களின் உதவியுடன் விசேட சிரமதான பணிகள் முன்னெடுக்கப்பட்டன.

இந்த மாதம் முழுவதும் டெங்கு ஒழிப்பு வாரமாக பிரகடனப்படுத்தப்பட்டு மன்னார் மாவட்டத்தில் உள்ள ஒவ்வொரு கிராமங்களிலும் டெங்கு ஒழிப்பு செயற்பாடுகள் முன்னெடுக்கப்படவுள்ளன என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.



# திருகோணமலை மாவட்டத்தில் வெள்ளத்தால் 528 குடும்பங்களைச் சேர்ந்த 1414 பேர் பாதிப்பு!

(அஸ்ஹர் இப்றாஹிம்)

திருகோணமலை மாவட்டத்தில் கடும் மழை , வெள்ளப் பெருக்கு மற்றும் பலத்த காற்று என்பவற்றால் பாதிக்கப்பட்ட 528 குடும்பங்களைச் சேர்ந்த 1414 பேர் இடர் முகாம்களில் தங்க வைக்கப்பட்டுள்ளனர்.

மூதூர், கிண்ணியா, சேருநுவர, வெருகல் ஆகிய பிரதேச செயலர் பிரிவுகளுக்கு உட்பட்ட மாவடிச் சேனை, சேனையூர், வட்டவன், ஈஞ்சம்பத்தை, லங்காபடுண, ஆனைதீவு போன்ற கிராம சேவகர் பிரிவுகளுக்கு உட்பட்ட பொது மக்கள் இடர் முகாம்களில் பாதுகாப்பாகத் தங்க வைக்கப்பட்டுள்ளனர் என்று இடர் முகாமைத்துவ மத்திய நிலைய பிரதி பணிப்பாளர் கே.சுகுணதாஸ் தெரிவித்துள்ளார்.

இடர் முகாம்களில் தங்கியுள்ள மக்களை பார்வையிடுவதற்குக் கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமான், திருகோணமலை மாவட்ட அரச அதிபர் சமிந்த ஹெற்றியாராய்ச்சி, திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் கபில நுவன் அத்துகோரல்ல ஆகியோர் கடற்படைக்கு சொந்தமான படகில் வருகை தந்திருந்தனர்.

கடற்படையினர் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உலர் உணவுப் பொதிகளை வழங்கி வைத்தமை குறிப்பிடத்தக்கது.



# மனித நேயமற்ற செயற்பாடுகளால் விசனம் அடைந்துள்ளனர் மக்கள்!

**(அஸ்ஹர் இப்றாஹிம்)**

சாய்ந்தமருது பொலிவேரியன் குடியேற்ற கிராமத்தை அண்டியுள்ள கரைவாகு ஆற்றங்கரை ஓரமாக உடைந்த கண்ணாடித் துண்டுகள் விஷமிகளால் வீசப்பட்டுள்ளன.

இதனால் பிரதேசவாசிகளும், மீனவர்களும் பலவிதமான இன்னல்களுக்கு ஆளாகி வருகின்றனர்.

தற்போது பரவலாக மழை பெய்து வருவதால் கரைவாகு ஆற்றின் நீர் மட்டம் உயர்ந்துள்ள நிலையில் சிலரது இவ்வாறான செயற்பாடுகள் தொடர்பில் விசனம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதனால் நன்னீர் மீன்பிடியில் ஈடுபடுவோரும் பாதசாரிகளும் பகலிலும் இரவிலும் காயங்களுக்கு ஆளாகின்றனர் என்று தெரிவிக்கப்படுகிறது.



# இலங்கை பெண் கிளப்பின் 'அவரி' சஞ்சிகை வெளியீடு!

**(அஸ்ஹர் இப்றாஹிம்)**

இலங்கையில் உள்ள முஸ்லிம் பெண் ஆளுமைகளின் அமைப்பான இலங்கை பெண் கிளப்பின் எட்டாவது 'அவரி' சஞ்சிகை வெளியிட்டு வைக்கப்பட்டது.

சாய்ந்தமருது றியாலூல் ஜன்னா வித்தியாலயத்தில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் இலங்கை பெண் கிளப் உறுப்பினர்கள், எழுத்தாளர்கள் மற்றும் நலன்விரும்பிகள் கலந்து கொண்டனர்.




# மன்னார் அரச அதிபருக்கு தென்மராட்சியில் கௌரவம்

(த.சுபேசன்)

மன்னார் மாவட்ட அரச அதிபராக அண்மையில் கடமைகளைப் பொறுப் பேற்றிருக்கும் தென்மராட்சிப் பிர தேசத்தைச் சேர்ந்த க.கனகேஸ்வர னுக்கான கௌரவிப்பு நிகழ்வு நேற்று (07) ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் கொடிகாமம் நட்சத்திரமஹால் மண்டபத்தில் இடம்பெற்றது.

தென்மராட்சி மக்களும் பொது அமைப்புகளும் இணைந்து ஓய்வு நிலை அதிபர் க.கயிலாயபிள்ளை தலைமையில் இந்த நிகழ்வை முன்னெடுத்தனர்.

இந்த நிகழ்வில் விழா நாயகனின் தாயார் க.கனகம்மா மற்றும் மனைவி ஆகியோரும் கலந்து கொண்டனர்.

மதத் தலைவர்கள், வடக்கு மாகாணத்தைச் சேர்ந்த அரச அதி பர்கள்,கல்வியியலாளர்கள், திணைக் களங்களின் தலைவர்கள், தென்ம ராட்சிப் பிரதேச ஊடகவி யலாளர்கள் மற்றும் பொது மக்கள் எனப் பெருந் திரளானவர்கள் கலந்து கொண்டனர்.



# இ. போ. ச. பஸ் – கனரக வாகனம் கோட்டைக்கல்லாறு பாலத்தில் விபத்து

(அஸ்ஹர் இப்றாஹிம்)

மட்டக்களப்பு இருந்து கல்முனை நோக்கி பயணித்த இலங்கை போக்கு வரத்து சபைக்கு சொந்தமான பஸ்ஸும், தம்புள்ள நோக்கி பய ணித்த கனரக வாகனமும் கோட் டைக்கல்லாறு பாலத்தில் நேருக்கு நேர் மோதியதில் விபத்து இடம் பெற்றுள்ளது.

இந்த விபத்தில் பஸ்ஸில் பய ணித்த பலர் காயமடைந்துள்ளனர்.

பலத்த காயங்களுக்குள்ளான கனரக வாகன சாரதி களுவாஞ்சிக்குடி ஆதார வைத்தியசாலையில் அனு மதிக்கப்பட்டுள்ளார். விபத்து சம் பந்தமான மேலதிக விசாரணைகளை களுவாஞ்சிக்குடி பொலிஸார் மேற் கொண்டு வருகின்றனர்.

# இந்திய பிரதமர் தொடர்பில் சர்ச்சை கருத்து: மாலைதீவு அமைச்சர்கள் மூவர் இடைநீக்கம்!



இந்திய பிரதமர் நரேந்திர மோடியை அவமதிக்கும் வகையில் சமூக வலைதளங்களில் கருத்து தெரிவித்த மாலைதீவு அமைச்சர்கள் மூவர் இடைநீக்கம் செய்யப்பட்டுள்ளனர் என சர்வதேச ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

பிரதமர் நரேந்திர மோடி கடந்த 2, 3 ஆம் திகதிகளில் உத்தியோகபூர்வ பயணமாக லட்சத் தீவு சென்றிருந்தார். அந்த பயணத்தின் புகைப்படங்கள், காணொலிகளை அவர் சமூக வலைதளங்களில் பகிர்ந்தார்.

அதோடு அவர் வெளியிட்ட பதிவுகளில்,

"லட்சத்தீவுகளின் பிரமிக்க வைககும் அழகையும் அங்கு வாழும் மக்களின் அரவணைப்பையும் கண்டு பிரமிக்கிறேன். அகத்தி, பங்காராம், கரவெட்டி ஆகிய இடங்களில் மக்களோடு உரையாடும் வாய்ப்பு கிடைத்தது. அவர்களின் விருந்தோம்பலுக்கு நன்றி.

சாகச சுற்றுலா பயணத்தை விரும்புவோருக்கு லட்சத்தீவு மிகச் சிறந்த இடம். நான் ஸ்நோர்கெலிங் பொழுதுபோக்கில் ஈடுபட்டேன். கவச உடையில் நீருக்கடியில் மூழ்கியது புதிய அனுபவமாக இருந்தது" என்று தெரிவித்திருந்தார்.

பிரதமர் நரேந்திர மோடி சமூகவலைதளங்களில் வெளியிட்ட புகைப்படங்கள், காணொலி பதிவுகள் வைரலாக பரவின. பிரதமரின் பயணம் காரணமாக கடந்த 2 நாள்களாக கூகுளில் அதிகம் தேடப்பட்ட வார்த்தையாக லட்சத் தீவு தொடர்ந்து முதலிடத்தில் இருந்து வருகிறது. இதன் காரணமாக சுற்றுலாத் துறையை நம்பி வாழும் இந்தியாவின் அண்டை நாடான மாலைதீவு அதிர்ச்சி அடைந்தது.

பிரதமர் மோடியின் பயணம் குறித்து மாலைதீவு இளைஞர் நலத் துறை இணை அமைச்சர் அப்துல்லா மஹ்சூம் மஜித், சமூக வலைதளத்தில் வெளியிட்ட பதிவில், "மாலைதீவுக்கு மாற்றாக இந்தியாவின் லட்சத்தீவை மிகப்பெரிய சுற்றுலாத் தலமாக மாற்ற பிரதமர் நரேந்திர மோடி முயற்சி செய்கிறார். மாலைதீவை இந்தியா குறிவைக்கிறது" என்று குற்றம்சாட்டியிருந்தார்.

மாலைதீவின் இளைஞர் நலன், தகவல், கலை துறை இணை அமைச்சர் மரியம் ஷியுனா, பிரதமர் மோடி குறித்து சமூக வலைதளத்தில் அவதூறான கருத்துகளை பதிவு செய்தார்.

பிரதமர் மோடியை மோசமாகவும் இஸ்ரேலின் ஊதுகுழல் என்றும் அநாகரிகமாக அவர் விமர்சனம் செய்தார். மாலைதீவு இளைஞர் நலத் துறை இணையமைச்சர் மால்ஷா ஷெரீப் சமூக வலைதளத்தில் வெளியிட்ட பதிவில், 'மோடி முர்தாபாத்" என்று மோசமாக விமர்சித்திருந்தார்.

மாலைதீவின் ஆளுங்கட்சி மூத்த தலைவர் ஜாகித் ரமீஸ், இந்தியர்களை கேலி செய்யும் வகையில் சமூக வலைதளத்தில் கருத்துகளை தெரிவித்தார்.

"சுற்றுலா துறையில் எங்களுடன் இந்தியா போட்டி போடுவது ஒரு மாயை. நாங்கள் வழங்கும் சேவையைப் போன்று இந்தியாவால் வழங்க முடியுமா? இந்தியர்களால் சுத்தத்தை பேண முடியுமா? இந்திய சுற்றுலா நகர அறைகளின் தூர்நாற்றம் ஒன்றே, சுற்றுலா துறையை படுபாதாளத்துக்கு தள்ளிவிடும்" என்று விமர்சித்தார்.

மாலைதீவு அமைச்சர்கள் மரியம் ஷியுனா, அப்துல்லா மஹ்சூம் மஜித், மால்ஷா ஷெரீப், ஆளும் கட்சி மூத்த தலைவர் ஜாகித் ரமீஸ் ஆகியோரின் சர்ச்சைக்குரிய கருத்துகளுக்கு இந்தியர்கள் கடும் கண்டனம் தெரிவித்தனர்.

இதனால் அதிர்ச்சி அடைந்த மாலைதீவு அரசு சார்பில் நேற்று விரிவான விளக்கம் வெளியிடப்பட்டது. அதில், "அமைச்சர்களின் கருத்துகளுக்கும் மாலைதீவு அரசுக்கும் எவ்வித தொடர்பும் கிடையாது. அவை அவர்களின் தனிப்பட்ட கருத்து.

வெளிநாட்டு தலைவர்களை அவதூறாக விமர்சிப்பதை மாலைதீவு அரசு ஏற்காது. சர்ச்சைக்குரிய கருத்துகளை தெரிவிப்போர் மீது அரசு தரப்பில் கடும் நடவடிக்கை எடுக்கப்படும்" என்று தெரிவிக்கப்பட்டது.

இதைத் தொடர்ந்து மாலைதீவு ஜனாதிபதி முகமது முய்சு நேற்று 3 அமைச்சர்களையும் தற்காலிகமாக பதவி நீக்கம் செய்து உத்தரவிட்டுள்ளார்.

# பிரபல நடிகருக்கு கட் அவுட் வைத்த ரசிகர்கள் மூவர் மின்சாரம் தாக்கி பலி





கர்நாடகாவில் ரொக்கிங் ஸ்டார் என்றழைக்கப்படும் நடிகர் யாஷிற்கு இன்று பிறந்தநாள்.

இதனால் கர்நாடகாவின் லக்ஷ்மேஷ்வர் தாலுகா சுரங்கி என்ற கிராமத்தில் அவரது ரசிகர்கள் கட் அவுட் வைப்பதற்கு ஏற்பாடு செய்திருந்தனர்.

இந்த நிலையில், யாஷின் ரசிகர்கள் சிலர் கட் அவுட்டை தூக்கிச் சென்ற வேளையில் எதிர்பாராத விதமாக அதன்மீது மின்சாரம் பாய்ந்துள்ளது.

இதன்போது அதனை தூக்கிச் சென்ற 3 பேரும் மின்சாரம் தாக்கி சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளனர் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த சம்பவம் கர்நாடக மாநிலத்தில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

# பங்களாதேஷ் பொதுத்தேர்தலில் வெற்றி:

# 5 ஆவது தடவையாகவும் பிரதமர் ஆகிறார் ஹசீனா



பங்களாதேஷில் 12 ஆவது பொதுத் தேர்தல் முடிவுகள் வெளியாகியுள்ளன. முதல்கட்ட முடிவுகளின்படி, பங்களாதேஷ் பிரதமர் ஷேக் ஹசீனா தொடர்ந்து நான்காவது முறையாக வெற்றி பெற்றுள்ளார்.

தேர்தலில் அவரது கட்சியான அவாமி லீக் மூன்றில் இரண்டு பங்கு பெரும்பான்மையைப் பெற்று வெற்றியை ருசித்துள்ளது.

நேற்று அனைத்து இடங்களிலும் வாக்குப்பதிவு முடிவடைந்த நிலையில், ஷேக் ஹசீனாவின் அவாமி லீக் கட்சி மொத்தமுள்ள 300 இடங்களில் 200 இடங்களை கைப்பற்றியுள்ளது. கிட்டத்தட்ட 90 சதவீத முடிவுகள் அறிவிக்கப்பட்ட நிலையில் மூன்றில் இரண்டு பங்கு வெற்றியை அவாமி லீக் பெற்றுள்ளதாக அந்நாட்டு தேர்தல் ஆணையம் அறிவித்துள்ளது.

ஷேக் ஹசீனா எட்டாவது முறையாக கோபால்கஞ்ச்-3 தொகுதியில் வெற்றி பெற்றுள்ளார். 1986 இல் இருந்து இத்தொகுதியில் போட்டியிட்டு வரும் அவர், இம்முறை 2 லட்சத்து 49 ஆயிரத்து 965 வாக்குகளைப் பெற்றார்.

அவரை எதிர்த்து போட்டியிட்ட போட்டியாளர்களில் முக்கியமானவரான பங்களாதேஷ் சுப்ரீம் கட்சியைச் சேர்ந்த எம். நிஜாம் உதின் லஷ்கர் வெறும் 469 வாக்குகள் மட்டுமே பெற்றார்.

இதன்மூலம் ஷேக் ஹசீனா, அந்த நாட்டின் பிரதமராக ஐந்தாவது முறையாக பதவி ஏற்க இருக்கிறார். அதேபோல் தொடர்ச்சியாக நான்காவது முறையாக பதவி ஏற்கவுள்ளார்.

இது ஒட்டுமொத்தமாக அவரது கட்சிக்கு 5 ஆவது வெற்றியாகும். பங்களாதேஷ் பொதுத்தேர்தலை பிரதான எதிர்க்கட்சியான பங்களாதேஷ் தேசியவாத கட்சி (பி.என்.பி.) புறக்கணித்துள்ளது.

ஹசீனா பதவி விலக வேண்டும் என்ற தங்களின் கோரிக்கையை நிராகரித்ததைத் தொடர்ந்து தேர்தலை புறக்கணிப்பதாக பிஎன்பி கட்சியைச் சேர்ந்த முன்னாள் பிரதமர் கலீதா ஜியா அறிவித்தார். தேர்தலுக்கு முன்பாக நாட்டில் பல்வேறு இடங்களில் வன்முறைகள் நிகழ்ந்தன. பல்வேறு இடங்களில் வாக்குச்சாவடிகள் தீ வைத்துக் கொளுத்தப்பட்டன.

"இந்தியா ஒரு நம்பகமான நட்பு நாடு, 1971 ஆம் ஆண்டு விடுதலைப் போரின்போது எங்களுக்கு அடைக்கலம் கொடுத்தது" என்று பங்களாதேஷ் பிரதமர் ஷேக் ஹசீனா தெரிவித்துள்ளார்.

தேர்தல் நாளில் இந்தியாவுக்கு அவர் அனுப்பிய செய்தி குறித்து அவர் கருத்து தெரிவிக்கையில்,

"நாம் மிகவும் அதிர்ஷ்டசாலிகள். இந்தியா எங்களின் நம்பகமான நட்பு நாடு. எங்களின் விடுதலைப் போரின் போது எங்களுக்கு ஆதரவளித்தது.

1975 இற்கு பின்னர் நாங்கள் எங்கள் ஒட்டுமொத்த குடும்பத்தையும் இழந்தோம். அவர்கள் எங்களுக்கு அடைக்கலம் கொடுத்தார்கள். இந்திய மக்களுக்கு எங்களின் மனமார்ந்த வாழ்த்துக்கள்" என்று தெரிவித்துள்ளார்.

# 81 ஆவது கோல்டன் குளோப் விருதுகள்: சிறந்த திரைப்படமாக ஓப்பன்ஹெய்மர் தெரிவு





திரைத்துறையின் உயரிய விருதான '81 ஆவது கோல்டன் குளோப் விருதுகள்' ரசிகர்களின் மிகுந்த எதிர்பார்ப்புக்கு மத்தியில் இன்று அறிவிக்கப்பட்டன.

அமெரிக்காவின் 'பெவெல்ரி கில்ஸ்' நகரில் நடைபெற்ற இந்த விருது வழங்கல் விழாவில், கடந்த ஆண்டு வெளியான திரைப்படங்களில் சிறப்பாக தமது திறமைகளை வெளிக்காட்டியவர்களுக்கு விருதுகள் வழங்கப்பட்டன.

அந்த வகையில், சிறந்த திரைப்படத் திற்கான கோல்டன் குளோப் விருதை "ஓப்பன்ஹெய்மர் திரைப்படம்" வென்று சாதனை படைத்துள்ளது.

சிறந்த நடிகர் சிலியன் மெர்பி, சிறந்த நடிகை எமா ஸ்டோன் உள்ளிட்டவர்களுக்கும் விருதுகள் வழங்கப்பட்டன.



# கிண்ணியாவில் மருத்துவ நிலையம்; இயங்க வைப்பதற்கு நடவடிக்கை!

(ஏ.எச்.ஹஸ்பர்)

திருகோணமலை மாவட்டத்தின் கிண்ணியா பிரதேச செயலர் பகுதிக்குட்பட்ட மஜீத் நகர் ட சந்தியில் மருத்துவ நிலையத்துக்கு அமைக்கப்பட்ட கட்டடம் பல வருட காலமாகப் பாழடைந்த நிலையில் காணப்படுகிறது.

இந்தக் கட்டடம் ஆரம்பிக்கப்பட்டுத் திறப்பு விழா மட்டுமே இடம் பெற்ற நிலையில் பயன்படுத்தப்படவில்லை.

இந்தப் பகுதியில் உள்ள கர்ப்பிணி தாய்மார், குழந்தைகளுக்கான நிறை, போசாக்கு தொடர்பிலான சிகிச்சைகளுக்கு பல கிலோ மீற்றர் தூரம் செல்ல வேண்டியுள்ளது.

இதனை கருத்தில் கொண்டு குறிஞ்சாக்கேணி சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகம் ஊடாக இதனை இயங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.



குறிஞ்சாக்கேணி சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் ஏ.எம்.எம்.அஜீத் கட்டடத்தைப் பார்வையிட்டதுடன் எதிர்வரும் வாரமளவில் மீள இயங்க நடவடிக்கை எடுக்கப்படும் என்று தெரிவித்துள்ளார்.

# அம்பாறை ஆறுகளை அண்டிய பிரதேசங்களில் விஷ ஜந்துக்கள்!

## அச்சத்தின் மத்தியில் உள்ளனர் மக்கள்

(அஸ்ஹர் இப்றாஹிம்)

அம்பாறை மாவட்டத்தின் ஆறு, குளம் மற்றும் வடிகான்களை அண்டியுள்ள பிரதேசங்களில் வாழும் மக்கள் இரவு வேளைகளில் விஷ ஜந்துக்களின் தொல்லைக்கு முகம் கொடுக்க வேண்டியுள்ளனர் என்று பிரதேச வாசிகள் விசனம் தெரிவிக்கின்றனர்.

தொடர்ச்சியான மழையாலும் அதனால் ஏற்பட்டுள்ள வெள்ள நிலைமையாலும் வேறு இடங்களில் இருந்து நீரோட்டத்தால் வந்திருக்கலாம் என்று தெரிவிக்கப்படுகிறது.

பாம்பு, முதலை, மற்றும் ஆமைகள் போன்றவற்றின் நடமாட்டமும் இரவு வேளைகளில் அதிகரித்துள்ளன என்றும் நிம்மதியாக வீடுகளில் தங்கியிருக்க முடியாத நிலமை தோன்றியுள்ளது என்றும் மக்கள் தெரிவித்துள்ளனர்.

இரவு வேளைகளில் வீட்டுக்குள் புகும் கொடிய நாகம், புடையன், காட்டு விரியன், வளலை போன்ற பாம்புகளின் கடிக்கு இலக்காகி பலர் வைத்திய சாலைகளில் சிகிச்சை பெற்று வருகின் றனர் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.




# தலைவரானால் தடம் மாறுவேன் என்ற சந்தேகம் அறவே வேண்டாம்

## தேர்தலுக்காக வார்த்தைகளைப் பிழையாக பாவிக்கமாட்டேன் என்று அம்பாறை ஊடக சந்திப்பில் சிறிதரன் எம்.பி. தெரிவிப்பு

*(வி.ரி.சகாதேவராஜா)*

**“தேர்தலுக்காக வார்த்தைகளைத் தவறாகப் பயன்படுத்த மாட்டேன். தலைவராக தெரிவானால் தடம் மாறுவேன் என்று சந்தேகம் வேண்டாம். அதற்காகத் தேங்காய் உடைக்கவும் கற்பூரம் கொளுத்தி சத்தியம் செய்யவும் தேவையில்லை.”**

**- இவ்வாறு இலங்கைத் தமிழரசுக் கட்சியின் தலைமைத்துவத்துக்குப் போட்டியிடும் யாழ்ப்பாணம் - கிளிநொச்சி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறிதரன் நேற்று நடைபெற்ற அம்பாறை மாவட்ட ஊடக சந்திப்பில் தெரிவித்தார்.**

கூடவே நாடாளுமன்ற உறுப்பினர் தவராசா கலையரசன், முன்னாள் காரைதீவு தவிசாளர் கிருஷ்ணபிள்ளை ஜெயசிறில் ஆகியோரும் கலந்து கொண்டனர்.

அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில்,

“வரலாற்றில் முதல் தடவையாக மக்கள் தலைவனை மக்கள் தொண்டர்கள் தெரிகின்ற சந்தர்ப்பம் வந்திருக்கின்றது.வேறெந்தக் கட்சியிலும் இல்லாத ஜனநாயக அணுகுமுறை இது. தேர்தல் என்றால் வெற்றி தோல்வி சகஜம். பரீட்சை போல. அதில் சில நெருடல்கள் இருக்கத்தான் செய்யும். ஆனால், அது கால ஓட்டத்தில் மாறி போகும்.

எமது நோக்கம் எல்லாம் தமிழ்த் தேசியத்தை நோக்கியதாகவே இருக்கும். மக்களோடு இணைந்து பயணிக்க வேண்டியது எனது கடமை. அதனை நான் மக்களோடு மக்களாக இணைந்து முன்னெடுப்பேன்.” – என்றார்.

அவர் தொடர்ந்தும் உரையாற்றும் போது,

“இன்று (நேற்று) அம்பாறை மாவட்டத்துக்கு விஜயம் செய்து மூன்று தொகுதிகளையும் உள்ளடக்கிய பொதுச் சபை உறுப்பினர்களுடன் கலந்துரையாடினேன். ஆரோக்கியமான கருத்துக்களை மனம் விட்டு பேசினார்கள். நான் தலைவரானால் எதிர்காலத்தில் அம்பாறை மாவட்டத்தில் எவ்வாறு செயற்பட வேண்டும் என்ற துல்லியமான கருத்து ஏற்பட்டிருக்கின்றது.

29 கிராம சேவை பிரிவுகளைக் கொண்ட தமிழர் பிரதேசமாக கல்முனை தமிழ் பிரதேச செயலகம் உள்ளது. ஏலவே இது வர்த்தமானி அறிவித்தல் செய்யப்பட்டுள்ளது. இருந்தபோதிலும் சகோதர இன சில அரசியலாளர்கள் இதனைத் தடுப்பது பகிரங்கமாகவே தெரிகின்றது .

நான் தலைவரானாலோ இல்லையோ எமது கட்சி இந்தப் பிரதேசம் செயலகம் தொடர்பில் தனித்துவமான செயற்பாடுகளைத் தொடர்ந்து முன்னெடுக்கும்.

இதற்காக அன்று நாடாளுமன்ற உறுப்பினராக இருந்த கோடீஸ்வரனும், இன்று நாடாளுமன்ற உறுப்பினராக இருக்கும் கலையரசனும் எல்லாம் இந்த விடயத்தில் கூடுதல் அக்கறை செலுத்தி இருந்தார்கள். இப்போது வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. முயற்சி தொடர்ந்து கொண்டிருக்கின்றது. இதற்குப் பேச்சு மூலம் தீர்வு காணப்படுமா? என்பது கேள்விக்குறியாக இருக்கின்றது.

எது எப்படியோ அரசு இந்தச் செயலகத்தை மக்களிடம் கையளித்தேயாக வேண்டும். இதுவே எமது கட்சியின் நிலைப்பாடு. எமது கட்சியின் நோக்கமே இன விடுதலைக்கான இலக்காகும். அதனை உடைப்பதற்கு மாறி மாறி வரும் அரசுகள் போதை வஸ்து பாவனை, நில ஆக்கிரமிப்பு, புத்தர் சிலை விவகாரம் போன்ற செயற்பாடுகளை முன்னெடுக்கின்றார்கள். அதற்கு எமது மக்கள் பலியாகக் கூடாது. நாங்கள் மக்களோடு இணைந்து பயணிக்கும் வேலைத் திட்டத்தை முன்னெடுப்போம். அந்த நம்பிக்கை எனக்கு இருக்கின்றது.

வெற்றியோ, தோல்வியோ நாங்கள் கட்சிக்காக இணைந்து பயணிப்போம். கட்சியைச் சீர்குலைக்கும் எண்ணம் கடுகளவும் எனக்கு இல்லை. தேசிய இலக்கை நோக்கிப் புலம்பெயர் உறவுகளுடன் இணைந்து எமது மக்களின் எதிர்காலத்தை நோக்கிய பயணத்துக்கு நாங்கள் முனைப்பாகச் செயற்படுவோம்.” – என்றார்.